அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு ஆனி - ஆடி ஜூலை 2016 முரசு 10 ஒலி 109



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/-     ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்

### பசித்திரு! தனித்திரு! விழித்திரு!



## இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

சுருள்விரிவுடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி அகவல்

**நாள்:** ஆகஸ்ட் 26,27,28 வெள்ளி, சனி, ஞாயிறு
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்:** வள்ளலார் சத்திய யோக சாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**இந்த பயிற்சி முகாமில்...**

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானங்கள்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 50 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு: 94434 89849, 99651 50531
அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை,
திருவண்ணாமலை.

அன்பு உள்ளங்களே! நாம் இப்பூவுலகில் ஆனந்தமாக வாழ்வதற்கே பிறந்திருக்கின்றோம். அதற்கு நம் உடல், மனம், உயிர் இம்மூன்றும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த மூன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு பஞ்ச பூதங்களினின்று நமக்குக் கிடைக்கும் சக்திகள் நம் உடலில் சரியான விகிதத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

இவைகளில் எது ஒன்று குறைந்தாலும் அதற்கு ஏற்பவே உடல் அல்லது மனதில் துன்பங்கள் வரும். இவைகளை சரிசெய்து கொள்வதற்கு பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியைப் பெறும் முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்த இடத்திலிருந்தே இச்சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் இயற்கை இரகசியங்களை நம் வள்ளல் பெருமானார் கண்டு கொண்டார்கள். அதன்மூலம் எல்லாச் சக்திகளையும் பெற்றார்கள். அதற்கு சில ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகம் தழைக்க வந்துதித்த நம் வள்ளல் பெருமான் கண்ட இவ்வொழுக்க நெறிமுறைகளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதே. "*ஆழ்நிலை தியான முகாம்*"

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் ஆகஸ்ட் 24-ஆம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: T.ஷர்ட், ஷாட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும்.
   ஆகஸ்ட் 27-ஆம் ஞாயிறு மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

பஸ் ரூட்: பொள்ளாச்சி, உடுமலை பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து பஸ் வசதி உள்ளது. பழனி வழியாக வருவோர் பழனி - ஆனைமலை பேருந்தில் ஏறி ரெட்டியார் மடம் ஸ்டாப்பிங்கில் இறங்கி அர்த்தநாரிப்பாளையம், பெருமாள்மலை அடிவாரம் என கேட்டு வரவும்.

பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

# மெய்ஞ்ஞானக் கல்வி

இந்த ஸ்தூல உலகம் ஜடப் பொருட்களாலும், ஆற்றல்களாலும், அழுத்து விசையாலும், ஆகாயத்தாலும் நிரம்பி இருக்கிறது. உலகம் தோன்றிய காலம் முதல் மனித சமுதாயம் எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. நம் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி வாழ்ந்த வசதி வாய்ப்புகள் குறைந்த வாழ்வை இன்று நாம் வாழவில்லை. இன்று எத்தனை எத்தனை தொழில்நுட்ப மாற்றங்கள்! அறிவியல் முன்னேற்றங்கள்! அன்றாடத் தேவைகளுக்கான பயன்பாட்டுப் பொருட்களிலிருந்து ஆரம்பித்து எல்லாவற்றிலும் அபரிமிதமான வளர்ச்சியைக் காண்கின்றோம். ஆனால் இவை யாவும் வெளி உலக மாற்றங்களே.

வெளி உலகம் அறியாத, விஞ்ஞானத்தால் அறிந்துகொள்ள முடியாத ஓர் உலகம் உள்ளது. அது நமக்குள்தான் உள்ளது.

வெளி உலகம் நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான பொருட்களை உருவாக்கி வைக்கும். ஆனால் சந்தோஷத்தை நிர்ணயிப்பது நம் உள் உலகம்தான். இதற்கான ஒரு சிறு கதையை இங்கே காண்போம்.

ஒரு இளம் கணவனும் மனைவியும் ஒரு புது இடத்திற்குக் குடி வந்தார்கள்.

முதல்நாள் காலை அவர்களிருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அந்த இளம் மனைவி ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். அங்கு பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்த துணிகளைக் காய வைப்பது தெரிந்தது.

மனைவி தனது கணவரிடம், “அந்தத் துணிகளைப் பாருங்கள். அழுக்காகவே இருக்கிறது. என்ன துவைத்திருக்கிறாள். நல்ல சோப் உபயோகிக்க மாட்டாள் போலிருக்கிறது” என்று கூறினாள்.

கணவன் எல்லாவற்றையும் பார்த்தான், கேட்டான், ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

மறுநாளும், காலை அதேபோல சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டுப் பெண்மணி துணி காய வைத்தார். அன்றும் மனைவி முதல் நாள் கூறியது போலவே கூறினாள். கணவன் சிரித்துக் கொண்டான். இது தினமும் தொடர்ந்தது.

சில நாட்கள் கழித்து ஒரு நாள் காலை சாப்பிட்டுக்கொண்டிருந்த மனைவி ஜன்னலின் வழியே பார்த்து ஆச்சரியத்துப் போனாள். தனது கணவனிடம், “அங்கே பாருங்கள். துணிகள் நன்றாக சுத்தமாக இருக்கின்றன. அந்தப் பெண்மணி துணியை சுத்தமாகத் துவைக்கக் கற்றுக் கொண்டாள்” என்று கூறினாள்.

கணவன் அமைதியாக, “நான் காலையில் சீக்கிரம் எழுந்து நம் வீட்டு ஜன்னலை சுத்தம் செய்தேன். அதுதான் வித்தியாசம்” என்றான்.

நாம் பார்க்கும் மனிதர்கள், நிகழ்வுகள், செயல்கள் எல்லாவற்றின் குணாதிசயங்களுமே நாம் பார்க்கும் தன்மைக்கேற்பவே மாறுபட்டுத் தெரிகிறது. இவையனைத்தையும் நம் உள் உலகமே தீர்மானிக்கிறது.

இதனை நம் வள்ளல் பெருமானும் உரைநடைப் பகுதியில் "ஆன்ம அறிவு என்கிற கண்ணானது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளி மழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருக்கின்றன" என்கிறார்.

இவ்விதம் பார்க்கும்போது வெளிப் பொருட்கள் எத்தனை இருந்தாலும் நம் உள்உலகம் (மனம்) அழுக்கடைந்திருந்தால் ஆனந்தத்தை அடைவதென்பது கடினம்.

இவ்வுண்மையை உணராமல் உலக மக்கள் அனைவரும் வெளியில் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டால் நாம் ஆனந்தத்தை அடைந்து விடலாம் எனத் தவறாக எண்ணி வீண்காலம் கழிக்கின்றனர். இதனையே ஒரு சித்தர்

**மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகள்**
**வனத்தகத்து இருப்பினும் மனத்தகத்து அழுக்கறார்**
**மனத்தகத்து அழுக்கறுத்த மவுனஞான யோகிகள்**
**பிணத்தடத்து இருப்பினும் பிறப்பறுத்து இருப்பரே**

அதாவது மனதில் அழுக்கு நீங்காதவர் காட்டில் எத்தனை கோடி ஆண்டுகள் வாழ்ந்து தவம் செய்தாலும் எந்த பயனும் இல்லை. மேலும் மன அழுக்கு நீங்கிய ஒருவர் பிணத்தின் பக்கத்தில் இருப்பினும் பிறப்பை அறுத்து வாழ்வர் என்கிறார்.

மேலும் இக்கருத்தை திருவள்ளுவப் பெருந்தகையும்

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற**

மனத்தின் அழுக்கை நீக்கி சுத்த மனமுடையோராய் வாழ்வதே எல்லா அறங்களிலும் சிறந்த அறம் என்கிறார்.

இவ்விதம் நம் மகான்கள் அருளிய வாக்கின்படி பார்த்தால் அக அழுக்கைப் போக்கிக்கொண்டே இவ்வுலக வாழ்வை அனுபவிக்க வேண்டும் எனும் உண்மை விளங்குகிறது.

மேலும் கணிதம் எப்படிப் படிக்க வேண்டும், அறிவியல் எப்படிப் படிக்க வேண்டும், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களையெல்லாம் எப்படி படிக்க வேண்டும் என்று கற்றுத்தந்த கல்வி முறை, **எப்படி நினைக்க வேண்டும் என்று கற்றுத் தந்திருக்கிறதா?** எண்ணம்போல் வாழ்வு என்றுதானே நம் பெரியோர்கள் அருளியுள்ளனர். அவ்விதம் பார்த்தால் நம் மனத்தால் எப்படி நினைக்க வேண்டும் என்றுதானே முதலில் கற்றுத் தந்திருக்க வேண்டும்.

இன்றைக்கு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி என எத்தனையோ கல்லூரிகள் உருவாகி எத்தனையோ மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கி இருக்கிறது. ஆனால் எந்தக் கல்லூரி மனிதர்களை உருவாக்கி இருக்கிறது? அல்லது மனிதர்களை உருவாக்கும் கல்வி முறையோ அல்லது கல்லூரிகளோ உண்டா?

கத்தி என்பது ஒரு கருவி. அந்தக் கருவியிலோ அல்லது அந்த கண்டுபிடிப்பிலோ எந்த தவறும் இல்லை. அதைப் பயன்படுத்தும் மனித மனங்களைப் பொறுத்தே அது உயிர் வாங்கும் கருவியாகவும், உயிர் காக்கும் கருவியாகவும் விளங்குகிறது.

எவ்விதம் வாழ வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட திருக்குறளும், பிற ஞானிகளின் நூல்களும் இன்று வெறும் மதிப்பெண் எடுப்பதற்கும் மேடைகளில் பேசுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் அவல நிலை நிலவுகிறது. அதனை வாழ்வில் ஏற்று நடப்போர் வெகு சிலரே.

ஓர் அறிஞரின் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவத்தைக் காண்போம்.

“நான் மாணவனாக இருந்தபோது அந்த சம்பவம் நிகழ்ந்தது. இந்தியாவின் முதல் பிரதமர், நகருக்கு வருகை தருவதாக இருந்தது. அந்த ஜப்பல்பூர் நகரின் நடுவில், அழுக்கும், நாற்றமும் பிடித்த ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. நகரின் சாக்கடைகள் எல்லாம் அதில்தான் சங்கமம்!

அந்த நகரம் மிகப் பெரியது. போர்ட்லண்ட் நகரைவிடப் பத்து மடங்கு பெரியது. ஊரின் நடுவில் அந்தச் சாக்கடை நதி. குறுக்கே ஒரு பாலம். அதன் வழியாகச் செல்வது நரக வேதனை. அவ்வளவு நாற்றம் பிடித்த வேறு இடத்தை நான் கண்டதே இல்லை.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அந்தப் பாலத்தைக் கடந்து செல்லவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. வேறு வழியே இல்லை. அதைக் கடந்துதான் நகரின் மற்ற பகுதிக்குச் செல்ல முடியும்.

அதனால், ஊர்க்காரரர்கள், நறுமணம் மிக்க மலர்களால் பாலத்தை அலங்கரித்தார்கள்! அது கோடை காலம். மலர்கள் மிகுந்த நறுமணத்துடன் பூத்திருந்தன. பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் மலர்ச் சரங்கள் ஏராளமா கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன.

அந்தப் பாலத்தைக் கடந்து செல்கிறவர்களுக்கு, அந்த மலர்ச் சுவருக்கு அப்பால், மகா மோசமான அழுக்குச் சாக்கடை இருப்பது தெரியவே தெரியாது.

நான் பல்கலைக் கழகத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். அந்த நௌத்ரா பாலத்தைப் பலர் அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த பாலத்திற்கு ஒன்பது தூண்கள். ஒன்பது வாயில்கள் வழியாக சாக்கடை நீர் ஓடிக்கொண்டிருந்தது. அதனால்தான் அதற்கு சாக்கடை நதி எனப் பெயர்.

நானும் மலர் அலங்காரம் செய்பவர்களோடு சேர்ந்து கொண்டேன். நிறையபேர் வேலை செய்து கொண்டிருந்ததால் யாரும் என்னைத் தடுக்கவில்லை. நேரு வந்துவிடப் போகிறார் என்ற அவசரம் அவர்களுக்கு. பணியாட்களுடனும், தொண்டர்களுடனும் நான் சேர்ந்து கொண்டேன்.

நேரு, திறந்த ஜீப்பில் நின்றபடி ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார். நான் சட்டெனப் பாய்ந்து, ஜீப்பிற்கு முன்னால் சென்று, அதைத் தடுத்து நிறுத்தினேன்! வேறு எந்த இடத்திலும் அப்படி செய்திருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் இராணுவமும், போலீசும், பாதுகாப்புப் படையும் சூழ்ந்திருந்ததால் நெருங்கவே முடியாது.

பாலத்தின் மேல், தொண்டர்கள் மட்டும் இரண்டு பக்கங்களிலும் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். வேறு கூட்டம் எதுவும் இல்லை. யாரும் அங்கே வந்து நிற்கவும் விரும்ப வில்லை. கூடியிருந்தவர்கள், என்ன நடக்கிறதென்று கவனிப்பதற்குள் நான் பாய்ந்து விட்டேன்.

அந்தப் பாலம் சொர்க்கமாய் மணம் வீசியது! அந்தப் பாலத்தின் மேல் நின்று கொண்டிருந்தவர்களுக்குக் கொஞ்சம்கூட சாக்கடை நாற்றம் தெரியவே இல்லை.

நான் நேருவின் முன்னால் நின்று கொண்டு, "தயவு செய்து கீழே இறங்குங்கள்! இந்த மலர்களுக்கு அப்பால் நீங்கள் பார்க்க வேண்டும். அதுதான் இந்த நகரத்தின் யதார்த்த நிலைமை. உங்களை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள். உங்களை வரவேற்பதற்காக இந்த மலர்த்தோரணங்களைக் கட்டவில்லை. உங்களை ஏமாற்றுவதற்காகக் கட்டப்பட்டவை இவை," என்று கூறினேன்!

"நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

"கீழே இறங்குங்கள்! இப்படி ஓரத்தில் வந்து இந்த மலர்களுக்கு வெளியே பாருங்கள்!" என்றேன்.

அவர் உணர்ச்சிபூர்வமான, புத்திசாலி மனிதர். உள்ளூர்ப் பிரமுகர்கள் அவரைத் தடுக்க முயன்றார்கள்.

"இந்த முட்டாள்கள் சொல்வதைக் கேட்க வேண்டாம். இவர்கள்தாம் இந்த மலர்த்திரையைக் கட்டியவர்கள். உங்களை வரவேற்பதற்காக, இத்தனை மலர்கள் தொங்கவிடப்பட்டதை நீங்கள் வேறு எங்காவது பார்த்திருக்கிறீர்களா? இத்தனைக்கும் இங்கே மக்கள் கூட்டமும் இல்லை. இவர்கள் போட்ட சுலபமான கணக்கு இது. கீழே இறங்கிப் பாருங்கள்!" என்று சொன்னேன்.

அவர் கீழே இறங்கி வந்தார். என்னுடன் வந்து, மலர்ச் சரங்களை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தார்! அவரால் நம்பவே முடியவில்லை! உடனே அங்கிருந்த உள்ளூர்த் தலைவர்கள், மேயர், நகராட்சி உறுப்பினர்கள் ஆகியோரைப் பார்த்து, "இந்த இளைஞர் இப்படித் துணிச்சலாக இல்லாமலிருந்திருந்தால், உங்கள் ஊரின் உண்மை நிலையைக் காணாமல் தவறவிட்டிருப்பேன். இங்கே நீங்கள் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்களா?" என்றார் நேரு.

அப்புறம் அவர் என்னைப் பார்த்து, "நீ தில்லிக்கு எப்போதாவது வந்தால், என்னை வந்து பார்!" என்றார்.

"எப்போதாவதல்ல. உங்களை சந்திப்பதற்காகவே வருவேன். என்னை உள்ளேவிடச் சொல்லி, இந்த மடையர்களிடம் சொல்லுங்கள்!" என்றேன்!

அவர் உடனே, தம் செயலாளரைப் பார்த்து, "இவரைப் பார்த்துக் கொள்; யாரும் இவரைத் தடுத்து விடாதபடி பார்த்துக் கொள்" என்றார்.

நான் எப்போது விரும்பினாலும் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நேருவின் இல்லக் கதவுகள் எப்போதும் எனக்குத் திறந்திருந்தன.

இந்நிகழ்வு அந்த அறிஞரின் மனதில் ஆழப்பதிந்திருந்தது. ஏனெனில் இதுபோன்ற அழுக்கு ஆறுதானே நமக்குள்ளும் ஓடிக்கொண்டிருக்கிறது. இதையறியாது நாம் வெளியில் மலர்களாலும், வாசனை திரவியங்களாலும் அலங்காரம் செய்து கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோமே என்று அவர் உள்ளுணர்வு அறிவுறுத்தியது. இதைத்தான் நம் வள்ளல் பெருமானாரும்

**அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கு என்றே எனைஇந்த**
**யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே**

என்று திருஅருட்பாவில் தான் இப்பூவுலகிற்கு இறைவனால் வருவிக்க உற்றதன் நோக்கத்தை தெரிவிக்கின்றார்.

கண்ணாடியில் தன் முகத்தின் பிம்பத்தைப் பார்த்த குரங்கு வேறொரு குரங்கு எதிரில் இருப்பதாக எண்ணிக்கொண்டு அதனோடு சண்டையிடும். அதுபோல் பிரபஞ்சம் என்கிற கண்ணாடியில் மனக்குரங்கை வைத்துக் கொண்டு பார்க்கின்ற நாம் நம் மனதின் வெளிப்பாட்டை வேறொன்றாக எண்ணிக் கொண்டு சண்டையிட்டு துன்பப்படுகின்றோம்.

எனவே நம்முள் ஓடிக்கொண்டிருக்கும் அழுக்கு ஆறை (அழுக்காறை) நாம் சுத்தம் செய்தால்தான் உள் உலகம் சமநிலை அடையும். அப்போதுதான் இந்த வெளி உலக வாழ்வு என்றென்றும் மணம் வீசும் பூந்தோட்டமாக மாறும்.

**சுகமறியீர் துன்பம்ஒன்றே துணிந்தறிந்தீர் உலகீர்**
**சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மைஅறிந் திலிரே**
**இகம்அறியீர் பரம்அறியீர் என்னேநும் கருத்துஈது**
**என்புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ**
**அமுதவடிவம் பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே**
**முகமறியார் போலிருந்தீர் என்னை அறியீரோ**
**முத்தரெலாம் போற்றும் அருட் சித்தர்மகன் நானே.**

திருச்சிற்றம்பலம்




**விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**



*வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்*

**அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களைப் பிரசுரித்துப் பயனடையலாம்.**

**1) முழுப்பக்க விளம்பரம் – ரூ. 2000**
**2) அரைப்பக்க விளம்பரம் – ரூ 1000**
**3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) – ரூ 3000**
**4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) – ரூ 3000**

# வள்ளல் பெருமானார் நிகழ்த்திய அற்புதங்கள்

## ஒரே சமயத்தில் பல இடங்களில் தோன்றுதல்

கடலூர், பேரை தேவநாதன் என்பவர் பெருமானாருக்கு ஆட்பட்ட அன்பர்களுள் ஒருவர். அவர் பாடிய தோத்திரப்பாக்களை பார்வையிட்டுத் திருத்தியருளியதோடு சாற்றுக்கவி ஒன்றும் பெருமானார் அருளினார். ஒருநாள் இரவில் தேவநாதன் தன் மகனது நோய்க்காக மிகவும் வருந்தியவராய் வள்ளல் பெருமானை நினைத்தார். அப்போது வடலூரில் தருமச்சாலையில் அன்பரிடையே உபதேசம் செய்து கொண்டிருந்த பெருமானார் அத்தருணமே கடலூரில் தோன்றி தேவநாதன் வீட்டுக்கதவைத் தட்டினார். தேவநாதன் கதவைத் திறந்தார்.

பெருமானார் உள்ளே புகுந்து ஐயாசாமிக்கு திருநீறிட்டுச் சற்று நேரம் அங்கிருந்துவிட்டு பின் புறப்பட்டுவிட்டார். அன்றிரவே நோய் முற்றிலும் குணமாயிற்று. மறுநாள் தேவநாதன் தமது மகன் ஐயாசாமியை வண்டியில் அழைத்துக் கொண்டு வடலூர்க்கு வந்தார். தேவநாதன் வருவதைக் கண்டதும் விரைந்து எதிர்வந்து தனித்தழைத்துச் சென்று நேற்று கடலூர் வந்ததை இங்கு யாருக்கும் கூற வேண்டாம் எனக் கூறினார்.

தேவநாதனுக்கு ஐயமுண்டாயிற்று. அவர் சாலையிலிருந்தவர்களை வினாவினார். முன்னாள் இரவு முழுவதும் பெருமானார் சாலையிலேயே இருந்தனர் என்றும், வெளியில் செல்லவில்லை என்றும் அவர்கள் கூறினர். ஒரே சமயத்தில் பெருமானார் வடலூரிலும், கடலூரிலும் காட்சியளித்து அங்கங்கு அருளிய திறத்தைத் தேவநாதனும் சாலையிலிருந்தவர்களும் அறிந்து வியந்து போற்றினர்.

ஒருமுறை பெருமானார் திருவதிகைக்கு வழிபடச் சென்றபோது விழாக் காலமாதலின் மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. பெருமானாரைக் காண்பதற்காக கூட்டத்தில் பலர் நெருங்கவே பெரு நெருக்கடி உண்டாயிற்று. அப்போது பெருமானார் அக்கூட்டத்தில் பல இடங்களிலும் தோன்றிக் காட்சியளித்தார்.

ஒருநாள் மாலை தருமச் சாலையிலிருந்து பெருமானார் புறப்பட்டார். உடன் பலர் புறப்பட்டனர். தனியே உலாவச் செல்லக் கருதிய பெருமானார் உடன் வருபவர்களை நோக்கி ‘இருங்கள்’ என்று கூறி நடந்தார். அதன் பின்னரும் மற்றவர்கள் பின் தொடரவே பெருமானார் திடீரெனத் தொலைவில் காணப்பட்டார். தொடர்ந்தவர்கள் ஓடி நெருங்க முயன்றபோது பின்னும் தொலைவில் பெருமானைக் காணலாயினர்.

கருங்கழியில் உறையும் காலத்தில் ஒருநாள் மாலை பெருமானார் கல்லாங்குளத்தின் அருகே உலாவிக் கொண்டிருந்தார். தனித்திருக்கும் இதுவே உபதேசம் கேட்கத் தக்க சமயம் என்று கருதி அன்பர் ஒருவர் பெருமானாரை அணுகினார். பெருமானார் அத்தருணமே தொலைவில்

காணப்பட்டார். நெருங்க நெருங்கத் தூரமாகவே செல்லுவதைக் கண்ட அவ்வன்பர் அயர்ந்து நின்றார்.

மேலும் சபைக்கு மரம் வாங்குவதற்காக ஆறுமுக முதலியார் சென்னைக்குச் சென்றபோதும் பெருமானார் வடலூரிலிருந்தவாறே சென்னையிலும் தோன்றி அவருக்கு உதவியருளினார்.

## மழை பொழிவித்தது

கோடை காலத்தில் சித்திரைத் திங்களில் தருமச்சாலைக்கு வந்தவர்களில் பலர் மழையில்லாக் குறையால் துன்புற்றதை அறிந்த வள்ளல் பெருமானார் ஒரு செம்பு தண்ணீரைக் கொண்டுவந்து தமது காலில் ஊற்றும்படி கூறினார். அன்பர்கள் அவ்வாறே செய்ததும் சற்று நேரத்தில் மேகங்கள் திரண்டு மழை பெய்தது.

புதுப்பேட்டை என்னும் ஊரில் உள்ள அன்பர்கள் இந்நிகழ்ச்சியைக் கேட்டு வடலூருக்கு வந்து தம் ஊரில் மழையின்மையையும், கிணறுகள் நீர்ச் சுரப்பற்றுப் போயிருத்தலையும் விண்ணப்பித்தனர். பெருமானார் ஆறு குடம் தண்ணீரைத் தம் தலையில் விடக் கட்டளையிட்டார். அவ்வாறே செய்ததும் புதுப்பேட்டையில் ஆறு, கிணறுகளில் நீர் நன்கு ஊறி மேல் நீராயிற்று. முன்னிலும் சுவையாயும் ஆயிற்று. ஊரில் நல்ல மழையும் பொழிந்து செழித்தது.

திருச்சிற்றம்பலம்

## சுத்த சன்மார்க்க வேதமாகிய
# ஜீவகாருண்ய ஒழுக்கம்

**ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது என்ன?**

ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும், கேட்ட போதாயினும், இவ்வாறு உண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகும். அந்த ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தலே **ஜீவகாருண்ய ஒழுக்கம்.**

**ஜீவகாருண்யம் உண்டாவதற்கு உரிமை எது?**

ஜீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டபடியால் ஒர் உரிமையுள்ள சகோதரர்களேயாவர். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்ற போதும், துக்கப்படுவாரென்று அறிந்த போதும் அவரைத் தமது சகோதரர் என்று கண்ட மற்றொரு சகோதரருக்க உருக்கம் உண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு ஜீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும், துக்கப்படுமென்று அறிந்த போதும் மற்றொரு ஜீவனுக்கு உருக்கம் உண்டாவது **‘பழைய ஆன்ம உரிமை’** என்று அறிய வேண்டும். – திருஅருட்பா வசனபாகம்

Advertisement


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



### ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.


வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free )

OS ( Licenced )







பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

**BeyondexC Network Solutions**
பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# திருமந்திரம்



**சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவந்**
**தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு**
**சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்**
**கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. -யார் சன்மார்க்கி?**

ஆன்மாவாகிய தானும் சிவமும் வேறல்ல என உணரும் நிலையை எய்துவிப்பதே சன்மார்க்கமாம். வேதத்தில் ஒளி விளங்க ஏத்தப் பெறும் அச்சிவத்தின் பல்வேறு வடிவங்களான தெய்வங்களைக் கண்டு மகிழ்ந்து, கோபம் முதலிய ஆறு பகைகளை வென்று, சிவயோகம் புரியும் சித்தராய் விளங்கி, இறப்பை வென்றவரே சன்மார்க்கத்தின் கருத்தை (சாரத்தை, அனுபவத்தை) அறிந்தோர்.

**கானுறு கோடி கடிகமழ் சந்தனம்**
**வானுறு மாமல ரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. - கிரியை**

மண்ணும் விண்ணுமாகிய எங்கணும் நறுமணம் கமழும் சந்தனமும், அத்தகைய சிறந்த மணம் கமழும் நறுமலரும் கைக்கொண்டு நாள்தோறும் வழிபட்டாலும் தம்மை அடிமையென்று கொண்டு, பிற உயிர்களைக் கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் இருப்பதாகிய ஜீவகாருண்ய நெறியைக் கடைபிடித்து இறைவனை நினைப்பதாகிய திருவுடையார்க்கு அன்றி திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநி பாதம் கிட்டாது. சத்தி – திருவருள். நிபாதம் – நன்றாய்ப் பதிதல்; வீழ்ச்சி.

**கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்**
**அடக்க லுறுமவன் தானே யமரன்**
**விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை**
**நடக்கின் நடக்கும் நடக்கு மளவே - ஐந்திந்திரியம் அடக்கு முறைமை**

அனைத்து உயிரும் நன்னெறி எய்தும்பொருட்டுச் இறைவனால் அமைந்தருளப்பட்ட உடம்பின்கண் காணப்படும் பொறிகள் அந்நன்மைக்குத் துணையாகவே அமைக்கப்பட்டன. மலச்சார்பினால் அவைகள் தீயவழிகளில் செல்கின்றன. அவ்வழியில் நாமும் சென்றுவிடாது நலச்சார்பால் ஐம்புலனும் நம்மைப் பின்தொடரும் தகையினராய் ஒழுகுதல் வேண்டும். அங்ஙனம் ஒழுகுதலாவது தம்மைச் இறைவன் திருவடிக்கே ஒப்படைத்து மீளா அடிமையாய் வாழ்தலே. இதைத்தான் புலனடக்கம் என்றனர் நம் சித்தர்கள். இத்தகைய புலனடக்கமுள்ளவரே அமரராவர். இஃதல்லாது உள்ளம் அருந்தல் பொருந்தல்களாகிய இரண்டு இன்பத்தில் ஈடுபாடு கொண்டு அதன்வழி நடந்தால் உயிர் சக்தி வீணாகும். அவ்வுயிர் சக்தி இருக்கும் அளவே உடலும் இருக்கும். பின்னர் அழிந்துவிடும்.

**கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வர்**
**கண்காணி யில்லா விடமில்லை காணுங்காற்**
**கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவொழிந் தாரே. – அவனுக்கு எங்கும் கண்**

*மாந்தர் தாம் செய்வதை ஒருவரும் மேற்பார்க்கவில்லை என்று வஞ்சனை பலவும் செய்வர். மேற்பார்ப்பவன் இறைவன். அவன் இல்லாத இடமே இல்லை. எவ்விடத்திலும் உள்ள பொருள்கள் தனக்கே உரிமை என்று சொல்லும்படி அவன் அவற்றை உள்நின்று இயக்குகிறான். இதை யாரொருவர் உணர்கின்றாரோ அவர் தீவினை செய்யமாட்டார்.*

*திருச்சிற்றம்பலம்*

# மூத்தோர்சொல் அமிர்தம்

ஒருவர் ஒரு முறை தனது உடல்நிலை குறித்து மிகுந்த பயத்துடன் மருத்துவரிடம் சென்றார்.

அவர் மிக்க கவலையுடன், "டாக்டர்! எனது உடல் முழுவதும் வலிக்கிறது. நீங்கள்தான் அதை எப்படியாவது குணப்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

மருத்துவர், "எங்கே வலிக்கிறது, எப்படி வலிக்கிறதென்று விரிவாகக் கூறுங்கள்" என்றார்.

வந்தவர், "எனது தோள்பட்டையைத் தொட்டால் வலிக்கிறது, எனது முதுகைத் தொட்டால் வலிக்கிறது, எனது வயிற்றைத் தொட்டால் வலிக்கிறது, எனது காலைத் தொட்டால் வலிக்கிறது, எனது தலையைத் தொட்டால் வலிக்கிறது"... என்று அடுக்கிக் கொண்டே போனார்.

மருத்துவர் அவரை முழுவதுமாக பரிசோதித்தார்.

பின்னர் அந்த மனிதரிடம், "உங்கள் உடலின் மற்றப் பகுதிகளில் எந்தப் பிரச்சனையுமில்லை. உங்கள் விரல்தான் உடைந்துள்ளது. அதனால்தான் மற்ற பாகங்களைத் தொடும்போது வலிக்கிறது. உங்கள் விரலுக்குக் கட்டுப் போடுகிறேன். இரண்டு வாரங்கள் அதை அசைக்காமலிருந்தால் சரியாகிவிடும்" என்றார்.

இதுபோல்தான் பலசமயம் பிரச்சனை எங்கே இருக்கிறதென்றே நம்மால் சரியாகக் கண்டுபிடிக்க முடிவதில்லை. தவறான புரிதலுடனேயே வாழ்வில் பல அம்சங்களையும் அணுகி, சம்பந்தப்படாத மனிதர்கள்மீதோ காரணங்களின் மீதோ குற்றம் சுமத்தி உண்மையான பிரச்சினையிலிருந்து விலகி கவலையுற்றுக் கோபப்பட்டு நம் வாழ்வின் பல நல்ல தருணங்களை இழக்கிறோம்.

இந்த சம்பவத்தில் விரல் என்பது நாம் என்றும், உடலின் மற்ற பாகங்கள் நம்மைச் சுற்றியுள்ளவர்களென்றும் கொண்டால் வாழ்வின் தத்துவம் புரியும்.

**தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே**
**ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே – வள்ளலார்**

உலகின் புகழ்பெற்ற ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் தலைவரின் அலுவலகத்தில் ஒரு தம்பதியர் காத்திருந்தனர். நளினமற்ற உடைகளை அணிந்திருந்த அந்த நாட்டுப்புறத் தம்பதியரைப் பார்த்த தலைவரின் காரியதரிசி, “தலைவருக்கு இன்று முழுவதும் வேலை இருக்கிறது. அவரைப் பார்ப்பது கடினம்” என்று கூறினார்.

“பரவாயில்லை நாங்கள் காத்திருக்கிறோம். அவர் வேலை முடிந்ததும் பார்க்கிறோம்” என்று கணவர் கூறினார். காரியதரிசி எரிச்சலடைந்தார். இவர்களை எப்படியாவது தட்டிக் கழிக்கலாம் என்றால் விடமாட்டேன் என்கிறார்களே என்று நினைத்தார்.

இவர்களை உள்ளே விட்டால் தலைவர் தன்னைத் திட்டுவார் என்று அவருக்குத் தெரியும். அவர்கள் நாள் முழுதும் காத்திருந்தனர். அப்புறம் அவருக்கு வேறு வழி தெரியவில்லை. காரியதரிசி, தலைவரிடம் சென்று இந்தத் தம்பதிகளைப் பற்றிக் கூறி, “சிறிது நேரம் பார்த்து விட்டீர்களானால் அவர்கள் போய்விடுவார்கள்” என்றார்.

அவர்களது உடையையும் தோற்றத்தையும் பற்றிக் கூறியதுமே எரிச்சலடைந்த தலைவர், வேறு வழியின்றி அவர்களை உள்ளே அனுப்பச் சொன்னார். கடினமான முகத்துடனும் பெருமை மிக்க பாரம்பரியத்துடனும் அவர்களை எதிர்நோக்கினார்.

அவர்கள் உள்ளே வந்ததும் மனைவி, “எங்களது மகன் இந்தப் பல்கலைக்கழகத்தில்தான் படித்தான். இங்கு அவன் சந்தோஷமாக இருந்தான். துரதிஷ்டவசமாக சென்றவருடம் அவன் ஒரு விபத்தில் இறந்து போய்விட்டான். அவனது நினைவாக இந்த பல்கலைக்கழகத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்பது எங்கள் ஆசை” என்று கூறினார்.

ஹார்வார்டின் தலைவர் எரிச்சலுற்றார். “அம்மணி எங்கள் பல்கலைக்கழகத்தில் படித்து இறந்துபோன எல்லோருக்கும் இங்கு சிலை வைக்க முடியாது. இது என்ன கல்லறையென்று நினைத்தீர்களா?” என்று கோபத்துடன் கூறினார்.

“இல்லையில்லை” என்று மறுத்த மனைவி, “நாங்கள் சிலை வைக்கச் சொல்லவில்லை. எங்களின் மகனின் நினைவாக இந்தப் பல்கலைக்கழகத்துக்கு ஏதாவது ஒரு கட்டிடம் கட்டித்தர ஆசைப்படுகிறோம்” என்றார்.

அவர்களின் உடையையும் தோற்றத்தையும் கேவலமாக பார்த்தத் தலைவர், “கட்டிடமா! ஒரு பல்கலைக்கழகக் கட்டிடம் கட்ட வேண்டுமென்றால் எவ்வளவு செலவாகுமென்று உங்களுக்குத் தெரியுமா? ஹார்வார்டின் மதிப்பென்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இதன் மதிப்பு இப்பொழுது பத்து மில்லியன் டாலர்கள். என் நேரத்தை வீணாக்காதீர்கள்” என்றார்.

ஒரு நிமிடம் தம்பதியர் மௌனமாக இருந்தனர். ஒரு வழியாகப் புரிந்துகொண்டார்கள் என்று தலைவர் சிறிது சந்தோஷமடைந்தார்.

தனது கணவரிடம் திரும்பிய மனைவி, “ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க இவ்வளவுதான் செலவாகுமா, அப்போது நாமே ஏன் ஒரு பல்கலைக்கழகம் தொடங்கக் கூடாது?” என்று கேட்டார். கணவன் மௌனமாக தலையாட்டினார்.

தலைவரின் முகம் குழப்பத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்திருந்தது.

ஸ்டான்போர்ட் தம்பதியர் மெதுவாக எழுந்து வெளியே சென்றனர்.

ஹார்வார்ட் பல்கலைக்கழகம் அலட்சியம் செய்த தங்களின் மகனின் நினைவாக கலிபோர்னியாவில் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக்கத்தை உருவாக்கினார்கள் அந்த எளிய தம்பதியர்.

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து**

உருள்கின்ற பெரிய தேர்க்கு அச்சிலிருந்து தாங்கும் சிறிய ஆணி போன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அவர்களுடைய உருவின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

---

## ஆழ்மன சந்தேகங்களும் ஆழ்மன நம்பிக்கைகளும்

**மா**லை மூன்று மணிக்குச் சந்திப்பதாக முன்கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. ஏற்கனவே மூன்று இருபது ஆகிவிட்டிருந்தது. சிவா ஏகப்பட்டத் தயக்கத்துடன், “மன்னிக்கவும்!” என்று எச்சரிக்கையாகக் கூறியவாறு பாரதியின் அலுவலகத்திற்குள் நுழைந்தார்.

தவறுகள் ஒரு மனிதனைக் காயப்படுத்தும்போதுதான், அவை அவனை மாற்றுகின்றன. எனவே, ‘மன்னிக்கவும்’ என்று ஒருவரிடமிருந்து வருவதை சில நேரங்களில் நாம் அமைதியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அவர் மன்னிக்கவும் என்று கூறும்போது, ‘அதனாலென்ன, பரவாயில்லை’, என்று நீங்கள் கூறினால், தான் செய்த தவறை உணர்வதற்கான அந்த சந்தர்ப்பத்தை நீங்கள் அவருக்கு வழங்குவதில்லை. அப்போது, மக்கள் தங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பர்.

“தாமதமாக வந்தது சரியல்ல,” என்ற செய்தியை பாரதியின் முகபாவங்கள் சிவாவிற்கு உணர்த்தின. ஆனாலும் சந்திப்பு தொடர்ந்தது. சந்திப்பின் இறுதியில், “உங்களுக்குச் சிறிது நேரம் இருந்தால், எனக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த முடியுமா? உங்களுடன் பழக ஆரம்பித்ததிலிருந்து இந்தக் கேள்வி என் மனதிற்குள் வட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது,” என்று சிவா கூறினார்.

“நேரம் தவறாமைக்கு நீங்கள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? - இதுதானே உங்கள் கேள்வி,” என்று பாரதி இடைமறித்தார். சிவா புன்னகைத்துத் தலையாட்டி, பாரதியின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

பாரதி தன் இடத்தைவிட்டு எழுந்து வந்து சிவாவின் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். “சிவா, பிறப்பின் சிறப்பு நாம் அனைவரும் சமமாகப் பிறந்துள்ளதில் அடங்கியுள்ளது. மனிதகுலத்தின் சிறப்பு நாம் சமமானவர்களாக இறக்காமல் இருப்பதில் உள்ளது. ஒவ்வொரு மனிதனும் ஒரே மாதிரியான உறுப்புகளால்தான் உருவாக்கப்பட்டு இருக்கிறான். ஒரு மனிதனுக்கு எதுவெல்லாம் சாத்தியமோ, அனைவருக்கும் அது சாத்தியம். நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரே மாதிரியான விஷயங்கள்தான் இருக்கின்றன என்றால், விளைவுகளில் ஏன் இத்தனை வேறுபாடுகள் உள்ளன? ஒரு மனிதனால் ஏராளமானவற்றைப் படைக்க முடிகிறது, மற்றவர்களால் அது முடியவில்லை. பெரும்பான்மையான மக்கள் அதிகபட்ச முயற்சியைக் கொண்டு குறைந்தபட்ச விளைவுகளையே உருவாக்குவதும், மீதியுள்ளோர் குறைந்தபட்ச முயற்சியைக் கொண்டு அதிகபட்ச விளைவுகளைப் பெறுவதும் ஏன்? இதற்கு அறிவியல்பூர்வமான ஒரு விளக்கம் இருக்கிறது.” என்று பாரதி விளக்கினார்.

பாரதி தொடர்ந்து அளிக்கவிருந்த விளக்கத்தைக் கேட்க சிவா ஆர்வத்துடிப்புடனும் கவனமாகவும் காத்திருந்தார். “நீங்கள் என்னை மூன்று மணிக்கு சந்திப்பதாகக் கூறியிருந்தீர்கள், ஆனால் மூன்று இருபதுக்கு வந்தீர்கள். யதார்த்தத்தில், நாம் இருவரும் இங்கு நுண்தொழில்நுட்பத்தையோ ராக்கெட் அறிவியலையோ கையாண்டு கொண்டிருக்கவில்லை. எனவே, ஓர் இருபது நிமிடங்கள் அப்படியொன்றும் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால், வெளிப்படையாகத் தெரியக்கூடியதையும் தாண்டி ஏதோ ஒன்று நிகழ்கிறது. ‘மன்னிக்கவும்’ என்ற உங்களது வார்த்தையும், அதை நான் ஏற்றுக் கொள்வதும் விழிப்புணர்வு நிலையில் எல்லாவற்றையும் சரியாக்கிவிடுகிறது. ஆனால், அதிக ஆழமான ஒரு நிலையில், உங்கள் ஆழ்மனம் இந்த அனுபவத்தைக் குறித்து வைத்திருக்கிறது. அதுபோல் என் ஆழ்மனமும் இதைக் குறித்து வைத்துள்ளது. ‘சிவா மூன்று மணி என்று கூறினால், அது மூன்று மணியல்ல.’ உங்கள் விஷயத்தில் இது ஒரு விதிவிலக்கான நிகழ்வல்ல, மாறாக, அது மீண்டும் மீண்டும் தொடர்ந்து நடைபெறும் ஒரு நிகழ்வுதான்.

இன்று இந்த சந்திப்பில் நீங்கள், ‘நான் இந்தப் பணித்திட்டத்தைப் பதினைந்து நாட்களில் செய்து முடிப்பேன்,’ என்று கூறினீர்கள் அல்லவா? நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை வெளிப்படையாகக் கூற விரும்புகிறேன். நீங்கள் பதினைந்து நாட்களில் இதை செய்து முடிப்பீர்கள் என்று உள்ளூர நான் நம்பவில்லை. உங்கள் விளக்கங்களையும், பதினைந்து நாட்கள் என்று நீங்கள் கணித்து வைத்திருப்பதற்குப் பின்னால் உள்ள அறிவுப்பூர்வமான காரணத்தையும் என் வெளிமனத்தால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் என் ஆழ்மனம் உங்கள் அர்ப்பணிப்பை நம்ப மறுக்கிறது. நீங்கள் கூறுவது ஒன்று, செய்வது ஒன்று என கடந்தகால அனுபவங்களிலிருந்து பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று மணி என்பது ஒருபோதும் மூன்று மணியாக இல்லாமல் இருந்து வந்துள்ளபோது, பதினைந்து நாட்கள் மட்டும், பதினைந்து நாட்களாக இருக்குமென்று எப்படி என்னால் நம்ப முடியும்?” என்று விளக்கினார்.

குளிரூட்டப்பட்டிருந்த ஓர் அறையில் சௌகரியமாக அமர்ந்திருந்த போதும், சிவாவின் நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பத் துவங்கியிருந்தன. அவர் இப்போது அசௌகரியமாக உணரத் துவங்கினார். பாரதி தன்னைப் பற்றித்தான் விளக்கிக் கொண்டிருந்தார், அதுவும், ஓர் எதிர்மறையான போக்கில் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

பாரதி மேலும் விவரித்தார். “உங்கள் மனைவியின்மீது நீங்கள் கொண்டிருக்கும் நேசத்தில் உங்கள் மனைவிக்கு முழுமையான நம்பிக்கை இல்லை என்று நீங்கள் அடிக்கடி என்னிடம் குறைகூறி வந்துள்ளீர்கள் அல்லவா? அது இதே காரணத்தால்தான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் உங்கள் நிலையைப் பொறுத்தவரை, தாழ்ந்த நிலையைவிட மிகத் தாழ்ந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதோடு, இதுவும் எப்போதாவது நிகழும் ஒரு விஷயமல்ல. விழிப்புணர்வு நிலையில், உங்கள் மனைவிக்கு உங்களிடம் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் நீங்கள் உங்கள் மனைவியை நேசிப்பதாகக் கூறுவதை அவரது ஆழ்மனம் நம்ப மறுக்கிறது. ஏனெனில், ‘செவ்வாய்க் கிழமைகள் ஒருபோதும் செவ்வாய்க் கிழமைகளாக இருந்ததில்லை, ஐந்து மணி ஒருபோதும் ஐந்து மணியாக இருந்ததில்லை, நாளை என்பது ஒருபோதும் நாளையாக இருந்ததில்லை எனும்போது, நான் உன்னை நேசிக்கிறேன் என்று நீங்கள் கூறும்போது உண்மையிலேயே நேசிக்கிறீர்கள் என்று என்னால் எப்படி நம்ப முடியும்?’ என்று அது வியக்கிறது. உங்கள் மனைவியின் ஆழ்மனம், அவருக்கு அது பற்றிய எந்த விழிப்புணர்வும் இல்லாமலேயே, காலப்போக்கில் உங்கள் வார்த்தைகள்மீது மதிப்பிழந்துவிடுகிறது.

அதனால்தான், உங்கள் மகன் உங்கள் சகோதரரின் பேச்சைக் கேட்கிறான், ஆனால் உங்கள் பேச்சைக் கேட்பதில்லை என்பதை நீங்கள் கவனித்திருக்கக்கூடும். நீங்களும் உங்கள் சகோதரரும் உங்கள் சொந்த மகன்களிடம் தொடர்ந்து உங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியுள்ளீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் சகோதரரின் மகனிடமும், உங்கள் சகோதரர் உங்கள் மகனிடமும் கூடுதலாக நல்லவிதமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள். நாம் அனைவருமே பகுதிநேரம் நல்லவிதமாக நடந்து கொள்ளும் திறன் பெற்றிருக்கிறோம், ஆனால் முழுநேரமும் நாம் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கப்படும்போது, அது நமக்குக் கடினமாக இருக்கிறது. நம் குழந்தைகளிடம் கொடுத்த வாக்குறுதிகளை நாம் காப்பாற்றாமல் போவதன் மூலம், அவர்களது ஆழ்மனம் நம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை நாம் இழந்துவிடுகிறோம், குறிப்பாக நாம் தொடர்ந்து நம் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறும்போது. அவர்களுக்கு நம்மீதுள்ள மதிப்புக் குறையாமல் இருக்கக்கூடும், ஆனால் நம் வார்த்தைகள்மீது அவர்களுக்கு இருக்கும் மதிப்பை நாம் நிச்சயமாகத் தொலைத்துவிடுவோம்.”

பாரதி தொடர்ந்து பேசினார். “சிவா, ஒவ்வொரு முறை நீங்கள் வாக்குத் தவறும்போதும் அடுத்தவருடைய ஆழ்மனத்தில் நீங்கள் ஒரு சந்தேகத்தை உருவாக்குகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு வாக்குறுதி தகர்க்கப்படும்போதும் அந்த ஆழ்மன சந்தேகம்

உருவாக்கப்படுகிறது. மனித மனத்தின் பெரும் பகுதி ஆழ்மனமாகவும், ஒரு சிறு பகுதி வெளிமனமாகவும் இருப்பதால், விழிப்புணர்வு நிலையில் எல்லாமே சரியாக இருப்பதாகத் தோன்றினாலும், ஆழ்மனத்தில் சந்தேகம் இருப்பவர்களின் உறவுகள் ஒருபோதும் ஆழமான உறவுகளாக உருவாகாது. அவை மேலோட்டமான உறவுகளாகவே இருக்கும்."

பாரதி மேலும் தொடர்ந்தார். "பிரச்சனை நீங்கள் நினைப்பதைவிட அதிக சிக்கலானது. துவக்கத்தில், நேரம் தவறாமையைக் கடைபிடிக்காமல் இருப்பதும், வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுவதும், மற்றவர்களின் ஆழ்மனத்தில் சந்தேகங்களை விதைத்து, உங்கள் உறவுகளைப் பாதிக்கின்றன. பிறகு உங்களது ஆழ்மனம் அந்த சந்தேகங்களை உருவாக்குகிறது. அவ்வாறு நிகழும்போது அது உங்கள் வாழ்க்கையையே பாதிக்கிறது.

வாழ்க்கையில் ஒரு பெரிய விஷயத்தை சாதிக்க நீங்கள் விரும்பும் ஒவ்வொரு முறையும், ஏதோ ஒரு மகத்தான செயலைச் செய்ய நீங்கள் கனவு காணும் ஒவ்வொரு முறையும், நீங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியதால் உங்களது ஆழ்மனத்தில் நீங்கள் உருவாக்கி வைத்துள்ள சந்தேகங்களின் காரணமாக உங்கள் சொந்த ஆழ்மனமே உங்கள் ஆற்றலுக்குத் துரோகம் இழைக்கும். 'காலையில் கண்விழிப்பதற்காக நீங்கள் வைத்துள்ள அலாரத்திற்குக்கூட உங்களால் கண்விழிக்க முடியவில்லை,' 'நீங்கள் தொலைபேசியில் திரும்ப அழைப்பதாகக் கொடுத்த வாக்குறுதியைக்கூட உங்களால் காப்பாற்ற முடியவில்லை,' 'குறித்த நேரத்தில் கொடுப்பதாக நீங்கள் வாக்களித்த ஆவணங்களை உங்களால் கொடுக்க முடியவில்லை,' 'குறித்த நேரத்தில் ஒரு சந்திப்பிற்குக்கூட உங்களால் வர முடியவில்லை' எனும்போது, நீங்கள் ஒரு மகத்தானவனாக எவ்வாறு உருவாவது? உங்களால் சாதிக்க முடியும் விஷயங்களைப் பற்றி மற்றவர்கள் கொண்டிருக்கும் சந்தேகங்கள் அல்ல இவை, மாறாக, இவையனைத்தும் உங்கள் சொந்த ஆழ்மனம் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் சந்தேகங்கள்தான். இவ்வாறுதான் உங்கள் சொந்த ஆழ்மனம், அதில் ஏற்கனவே உருவாக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆழ்மன சந்தேகங்களின் காரணமாக, உங்கள் ஆற்றலுக்குத் துரோகம் இழைக்கிறது."

சிவா முற்றிலும் நிலைகுலைந்தவராகத் தோற்றமளித்தார். "எதுவும் தொலைந்து போகவில்லை. ஆழ்மனத்தில் நம்பிக்கைகளை உருவாக்குவதன் மூலம் எல்லாவற்றையும் மாற்றிவிடலாம்," என்று பாரதி அவரைத் தேற்றினார். "குறித்த நேரத்தில் செய்வதாக ஒப்புக் கொண்ட ஒரு செயலை அந்நேரத்தில் செய்வதும், எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதும் உங்கள் ஆழ்மனத்தில் நம்பிக்கைகளை உருவாக்கி உங்கள் ஆற்றலை வெளிப்படுத்த உதவும். அதோடு, இறுதியில் அடுத்தவர்களின் ஆழ்மனத்தில் நம்பிக்கைகளை உருவாக்கி ஆழமான உறவுகளை உருவாக்க உங்களுக்கு உதவும்."

"எனவே, சிவா, நான் நேரத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. நேரம் தவறாமையைப் பயிற்சி செய்வது ஆழ்மன நம்பிக்கைகளை உருவாக்குவதற்கான சாதனங்களில் ஒன்று. ஒரு சாதாரணமான குடும்ப சூழ்நிலையையும், எளிமையான கடந்தகாலத்தையும் கொண்ட

என்னால், இப்போது நான் அடைந்திருக்கும் நிலையை அடைய முடிகிறது என்றால், நான் கடைபிடித்து வரும் நேரம் தவறாமையும், வாக்குத் தவறாமையும்தான் அதற்குக் காரணம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது ஆழ்மன நம்பிக்கைகளை உருவாக்குவதற்கான ஓர் அற்புதமான சாதனம். நீங்கள் எவ்வளவு கற்றறிந்தவர் அல்லது நீங்கள் எவ்வளவு அறிவார்ந்தவர் என்பதைப் பற்றியது அல்ல இது. மாறாக, உங்கள் ஆழ்மனம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைப் பற்றியதுதான் இது. உங்கள் ஆழ்மன நம்பிக்கைகளைக் கொண்டு உங்கள் ஆழ்மனம் உங்களுக்கு எதிராகச் செயல்படுகிறது. அதனால்தான் ஒவ்வொரு மனிதனின் உந்துசக்தியும் அவன்தான், அவனது சொந்தத் தடையும் அவனேதான்," என்று பாரதி தெளிவுபடுத்தினார்.

சிவாவின் தோள்களை கனிவாகத் தொட்டு, "மாபெரும் பெருமிதம் - உங்கள் கண்முன்னாலேயே நீங்கள் வளர்வதுதான்! உங்களது வார்த்தையைக் காப்பாற்றும் ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்கள் கண்முன்னால் வளர்கிறீர்கள். அதன்மூலம் ஆழ்மன நம்பிக்கைகளை உருவாக்குகிறீர்கள். உங்கள் கண்களுக்கு முன்னால் வீழ்வதுதான் மிக மோசமான பின்னடைவு. உங்கள் வார்த்தைக்கு நீங்கள் தகுதியற்றவராகப் போகும் ஒவ்வொரு முறையும் உங்கள் கண்களுக்கு முன்னால் நீங்கள் தோற்றுப் போகிறீர்கள். அதன்மூலம் ஆழ்மன சந்தேகங்களை வளர்க்கிறீர்கள். தனிப்பட்ட வாக்குறுதிகளில் துவங்குங்கள். அதை நிறைவேற்றப் பழகிய பிறகு, மற்றவர்களுக்கு நீங்கள் வாக்குறுதி அளிக்கத் துவங்கலாம்," என்று பாரதி கூறினார்.

'அவன் சொன்னால், சொன்னபடி செய்வான்' என்று புரிந்து கொள்வதற்கு உங்கள் ஆழ்மனம் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் 'அவன் கனவு கண்டால், அதை நிச்சயமாக சாதிப்பான்' என்று அது நம்பத் துவங்கும்," என்று பாரதி கூறி முடித்தார்.

பாரதி ஒரு காகிதத்தை எடுத்து, "ஒரு மனிதனின் சக்தி அவனது மனத்தில் இருக்கிறது. அவனது மனத்தின் சக்தி அவனது ஆழ்மனத்தில் இருக்கிறது. அவனது ஆழ்மனத்தின் சக்தி அவனது ஆழ்மன நம்பிக்கையில் இருக்கிறது. இந்த ஆழ்மன நம்பிக்கைகள்தான் ஒரு மனிதனை மகத்தான நிலைக்கு உயர்த்துகின்றன. எல்லாம் நல்லபடியாக நடக்க உங்களுக்கு என் வாழ்த்துக்கள்! உங்களுக்கு இன்னும் அதிகச் சிறப்புகள் கிடைக்க என் வாழ்த்துக்கள்," என்று அதில் எழுதினார்.

அந்தக் குறிப்பை பாரதி சிவாவிடம் கொடுத்தார். "பதினைந்து நாட்கள் என்றால் பதினைந்து நாட்கள்தான். நான் மகத்தானவனாக ஆகப் போகிறேன்," என்று சிவா பதிலளித்தார்.

**வாய்மையும் தூய்மையும் தந்து நின்**
**திருவடிக்கு ஆளாக்குவாய் - திருஅருட்பா**

திருச்சிற்றம்பலம்

# முக்கோணம்

இந்த உலகில் எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் ஒவ்வொரு பொருளும் 'ஸத்வம்', 'ரஜஸ்', 'தமஸ்' என்ற மூன்று குணங்களினால் சூழப்பட்டுள்ளது. ஆனால் இறைவனிடம் இந்த மூன்று குணங்களின் சூழ்தல் கிடையாது. இந்த குணங்களிலிருந்து விலகியிருப்பவன் இறைவன் ஒருவன் தான். நாமும் இவைகளிலிருந்து விலகி விட்டோமானால் பிறகு அவனே 'நாம்' ஆகிவிடுவோம் என்பது சாஸ்திரங்களின் சித்தாந்தம். உலகம் முழுவதும் 'ஸத்வம்',' ரஜஸ்', 'தமஸ்' என்பதாக உள்ளது என்று கூறினால் அது எவ்வாறு?


சந்தோஷம், ஞானம் என்பது ஸத்வ குணத்தின் காரியம். துக்கம் என்பது ரஜோ குணத்தின் காரியம். தமோ குணத்தின் காரியம் மதிமயக்கம். தமஸ் என்றால் இருள். இருளில் என்ன தெரிகிறது? ஒன்றும் தெரிவதில்லை. ரஜஸ் சேர்ந்தால்தான் தமஸ் கேடு விளைவிக்கிறது. இல்லாவிடில் ஒன்றும் தெரியாத போது நாம் ஒன்றும் செய்யாமல் (சும்மா) இருக்கலாம். தமஸ், எப்போதும் தான் ஒன்றும் செய்யாதிருந்தாலும் கூட, ரஜஸ் வந்து சேரும்போது காரியத்தில் ஈடுபட வைக்கும். அப்போது அனர்த்தங்கள் வந்து சேரும்.

இவ்வாறு ஸகல உலகமும் – ஒரு பாம்பாகட்டும், ஒரு மனிதனாகட்டும் எதை எடுத்துக் கொண்டாலும் ஒருவனுக்கு அதனால் சந்தோஷம் உண்டு, ஒருவனுக்கு துக்கம் உண்டு; ஒருவனுக்கு அதனால் மதிமயக்கம் உண்டு. ஆகவே, மதிமயக்கம் உண்டாவதற்கு, சுகம் உண்டாவதற்கு, அதே மாதிரி துக்கம் உண்டாவதற்கு எது காரணம் என்றால், மூன்று குணங்கள் தான்.

பிரம்ம நிஷ்டர்களாய் இருக்கப்பட்டவர்கள் எப்பொழுதும் ஸத்வ குணத்திலேயே இருப்பவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸத்வ குணத்திலேயே இருப்பவர்கள் யதார்த்தமான அறிவையே கொண்டிருப்பர். ஆகையால் அப்பேற்பட்டவர்களிடம் நாம் சரணடைந்தோமானால் நமக்கு எப்பொழுதும் தவறான அறிவு இருக்கவே இருக்காது. அதை விடுத்து மூன்று குணங்களும் பொருந்தி இருப்பவர்களிடம் சேர்ந்தோமானால் நமக்கு பயம், தவறான அறிவு, மோஹம் ஆகியவைகள் எல்லாம் வந்து சேரும்.

திருச்சிற்றம்பலம்



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**மனம் ஆதிகட்கு அரிய மதஆதீத வெளிஆம் 81**
**அனாதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி 82**

ஓர்அறிவு, ஈர்அறிவு, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என அறிவை அறுவகைப் படுத்தினர் பழந்தமிழ் அறிவர்கள்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே, ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, உயிரினங்களை அவற்றது அறிவின் அடிப்படையில் பகுத்துக் காண்பது உளது. தொல்காப்பியர் அவ்வாறு பகுத்துக் கூறுகிறார்.

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு **மனனே**
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே – 1526

என்பது தொல்காப்பியம் (பொருளதிகாரம், மரபியல் – 22)

உடம்பால் மட்டும் உற்று அறிவன ஓர் அறிவு உயிர்கள்
உடம்பாலும் நாவாலும் அறிவன இரண்டு அறிவு உயிர்கள்
உடம்பு, நா, மூக்கு ஆகிய மூன்றாலும் அறிவன மூன்றறிவு உயிர்கள்.
உடம்பு, நா, மூக்கு, கண் ஆகிய நான்காலும் அறிவன நான்கறிவு உயிர்கள்.
உடம்பு, நா, மூக்கு, கண், காது இவை ஐந்தாலும் அறிவன ஐந்தறிவு உயிர்கள்.
இவ்வைந்தினோடு **மனத்தாலும்** அறிவன ஆறறிவு உயிர்கள்.

இக்காலத்தார் ஆறாவது அறிவு என்ன என்றால்? "பகுத்தறிவு" என்பர். பொதுவாக உலகியலில் பலரும் ஆறாவது அறிவு பகுத்தறிவு, நல்லது இது, தீயது இது என்று பகுத்து அறியும் அறிவு என்றே கூறுகின்றனர். இது சாதாரண வழக்கு. உண்மைவழக்கும், உயர்வழக்கும், நூல்வழக்கும் ஆறாவது அறிவு மனஅறிவு என்பதே. இதனை "**ஆறறிவதுவே அவற்றொடு மனனே**" என்று தொல்காப்பியர் கூறுவதைக் காண்க.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் புறக் கருவிகள். மனம் அகக்கருவி. புறக்கருவிகள் புறத்தே கண்களால் காணப்பெறுபவை; கட்புலனாகுபவை. அகக்கருவியாகிய மனம் கண்ணுக்குப் புலப்படாதது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புறக்கருவிகள் பொறி (ஐம்பொறி)

எனப்படும். இவற்றின் அறிவு புலன் எனப்படும், புறக்கருவிகளாகிய பொறிகள் இந்திரியங்கள் எனப்படும். அகக் கருவியாகிய மனம் கரணம் எனப்படும்.

பொறிகள் நன்றாக இருந்து, அவற்றின் புலன்கள் நன்றாக இல்லாவிட்டால் பயனில்லை.

கண்கள் நன்றாக இருந்து பார்வை இல்லெனின் பயனென்?

காதுகள் நன்றாக இருந்து கேட்கும் திறன் இல்லெனிற் பயனென்?

கண் இருந்தும் பார்வையில்லாதவர் குருடர். காதுகள் இருந்தும் கேளாதவர் செவிடர். இவ்வாறே ஏனைய பொறிபுலன்களும்.

பொறிபுலன்கள் நன்றாக அமைந்திருந்தும், மனம் நன்கு அமையாவிடில் பயனென்? நல்லுடலோடு நன்மனமும் இன்றியமையாதது. **உடல் உள்ளம் உயிர்** என்னும் மூன்றும் நன்றாக அமையவேண்டும்.

அப்பேர்ப்பட்ட மனம் முதலிய அகக்கருவிகளால் – அந்தக்கரணங்களால் – அறிய முடியாதவன் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன். மனாதிகட்கு அரிய.... அருட்பெருஞ்ஜோதி என்றார்.

**மனாதிகட்குஅரிய – மனம் முதலான கருவிகளால் அறிவதற்கு அரிய**
**மதாதீத வெளியாம் – மதங்களுக்கு அப்பாற்பட்ட மதாதீத வெளியாகிய**
**அனாதிசிற்சபையில் – ஆதிகாலத்திற்கும் முற்பட்ட அனாதிகாலந் தொட்டே விளங்கிவரும் சிற்சபையில் எழுந்தருளியுள்ள**
**அருட்பெருஞ்ஜோதி – அருட்பெருஞ்ஜோதி**

சிற்சபை அனாதி – ஆதியும் அந்தமும் அற்றது. ஆதிக்கு முற்பட்டது அனாதி. ஆதிகாலத்திற்கு முற்பட்ட காலம் அனாதி காலம். அனாதி காலமாகவே சிற்சபை உளது. அதி மதாதீத வெளியாக உள்ளது.

அதீதம் – கடந்தது. மத அதீதம் – மதம் கடந்தது. மதங்களுக்கு அப்பாற்பட்டது. "மதமாகிய மதங்கடந்த வாய்மையாகி" (மகாதேவ மாலை – 10 (2080))என்பார் பெருமானார். மதங்கடந்த வாய்மை என்பதுதான் மதாதீதம்.

மனமாதி கரணங்களுக்கு அரிய, மத அதீத வெளிஆம், அனாதி சிற்சபையில், அருட்பெருஞ்ஜோதியே.

மனத்திற்கு அதீதமான அருட்பெருஞ்ஜோதி மதத்திற்கும் அதீதமானது.

மதங்கடந்த மதாதீத நிலையை மனம் பற்றவேண்டும். பற்றின் அருட்பெருஞ்ஜோதியைப் பற்றலாம். அது நம்மைப் பற்றும்.

**திருச்சிற்றம்பலம்**

**ஜீவ ஒழுக்கம்**

எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், கோத்திரம், சூத்திரம், குலம், சாத்திரம், தேசமார்க்கம், உயர்வு, தாழ்வு முதலியனவாக பேதம் அற்றுத் தானாக நிற்றலாம். – உரைநடை

# உள்ளது உரைத்தல் பேருபதேசம்

*ஸ்ரீமுக வருஷம், ஐப்பசி மாதம், 7ஆம் நாள், புதவாரம், பகல் 8 மணிக்கு, மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதன் முதலில் கொடி கட்டினவுடனே நடந்த நிகழ்ச்சியின் குறிப்பு.*

இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்க நரக விசாரமில்லை. சுவர்க்க நரக விசாரமுள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைப்பட்டுத் திருவருட்டுணையால் கருணை நன் முயற்சி யெடுத்துக் கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித் தெழுந்த உண்மையறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம், திரிபு, மயக்கம்இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன் குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளை யிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முற்சாதனமாக

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. “சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்” என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம்கேட்டிருப்போம்.



# பாடலும் பொருளும்

மெய்ஞ்ஞான விருப்பத்தி லேறிக் கேள்வி
மீதேறித் தெளிந்திச்சை விடுத லேறி
அஞ்ஞான மற்றபடி யேறி யுண்மை
அறிந்தபடி நிலையேறி அதுநான் என்னுங்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்றவெல்லாங்
கடந்தேறி மௌனவியற் கதியிலேறி
எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டுங் காணேம்
என்கின்ற அனுபவமே யின்பத் தேவே – மகாதேவமாலை

இறைவனை அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகளை முன்னோர் வகுத்தனர். அதில் முடிந்த முடிபான இறைவனை அடையும் நிலையே ஞான வழியாகும். உண்மையான ஞான நிலை அறிந்து, அனுபவம் பெற்றோர் மரணமடைவதில்லை. மீண்டும் பிறப்பதும் இல்லை. மலையின் மெய்ஞ்ஞான மயமாய் வரவு போக்கற்ற நிலை கூடும் எனத் தெய்வமணி மாலையில் இதனை நமது பெருமானார் வெளிப்படுத்துகின்றார். சுத்தப் பிரணவ ஞான தேகம் பெறுவதே முத்தேக சித்தியாகும். இறைவனை ஞானதேகா என வள்ளலார் விளக்குகின்றார். கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் என்பதும் தூல தேகம் ஞான தேகமாக மாறுவதே. எனவே ஒவ்வொருவருக்கும் மெய்ஞ்ஞானத்தை அடைய வேண்டும் என்ற விருப்பம் ஒன்றே மேலோங்கி நிற்க வேண்டும். பிரபஞ்சத்தின் மீது வெறுப்பும் ஞானத்தின் மீது விருப்பமும் ஏற்பட வேண்டும்.

மெய்ஞ்ஞானத்தில் விருப்பம் ஏற்பட்டால் ஞானிகளுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களின் ஞானக் கருத்துக்களைக் கேட்கவும் வாய்ப்பு ஏற்படும். அடுத்து ஞானிகளின் பேச்சினைக் கேட்கின்ற ஆவலை வளர்த்துக் கொள்ள வேண்டும். அச்சமயம் நமது மனதிலே இதுவரை தோன்றியிராத, அறிந்திராத பல அற்புதக் கேள்விகள் எழும். ஞானிகளுடன் தொடர்பு கொண்டு அக்கேள்விகளுக்கெல்லாம் பதில் அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கேள்வி ஞானம் வளர்ந்தால் மட்டுமே சிந்தனையில் தெளிவு ஏற்படும்.

தெளிவு என்பது – இது நல்லது, இது கெட்டது என்பது மட்டுமல்ல. நாம் யார்? ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? என்ன ஆகப்போகிறோம்? என்பது போன்ற பல வினாக்களுக்குத் தெளிவான விளக்கம் தோன்றும்.

யாருடைய சிந்தனையில் இது பொய், இது உண்மை என்ற தெளிவு ஏற்பட்டதோ அவர்கள் உலக ஆசையை விட்டு விடுவர். கண்டதெல்லாம் அநித்தியமே, கேட்டதெல்லாம் பழுதே, கற்றதெல்லாம் பொய்யே, களித்ததெல்லாம் வீணே, உண்டதெல்லாம் மலமே, உட்கொண்டதெல்லாம் குறையே என்ற வள்ளலார் வாக்கின் உண்மைவிளங்கும். இவ்வாறு உணர்ந்தோர் இச்சை நீங்கப் பெறுவர்.

அஞ்ஞானமே உலக ஆசைகளுக்கு மூலகாரணம் ஆதலால் இந்த உலகியல் ஆசையை நீத்தோர் அஞ்ஞானம் நீங்கப் பெறுவர். உலகியலில் தோய்ந்திருப்போர் அஞ்ஞானிகள். இச்சையை விடுத்தோர் அஞ்ஞானத்தைக் கடந்தவராவர். அவர்களே உண்மையை உணர்ந்தோர் ஆவர். அஞ்ஞானம் நீங்கி உண்மையை அறிந்தோர் யார்?

அது நான் என்று இறைவனையும் தன்னையும் விரித்து நோக்குவோரே அஞ்ஞானிகள். இதையே கைஞ்ஞானம் அதாவது சிறுமை காட்டும் ஞானம் என்பார். எனது நிலை இது, நீ அடைய வேண்டிய நிலை இது, இரண்டு நிலைகளும் ஒரு நிலைதான். அது நான் என்று பிரித்து அறியும் நிலை மயல் ஆகும் என இறைவன் தனக்கு உணர்த்தியதாக **சற்குருமணி மாலையில்** தெரிவிக்கின்றார். எந்நிலை இது உறு நின்நிலை இது.

**இரு நிலைகளும் ஒரு நிலையென அறிவாய் முன் நிலை சிறிதுறல் இது மயல் உறவாம்... (சற்குருமணிமாலை)**

இறைவன் தன்னுள்ளேயே இருப்பதையுணர்ந்து மற்ற அனுபவ நிலைகளை ஒவ்வொன்றாகக் கடக்க வேண்டும். முடிவாக மனம் செயல்பாடற்ற மௌன நிலை அனுபவம் பெற வேண்டும். இறைவன் வரக்கூடிய வீதியை மௌனத்திருவீதி என்பார் வள்ளலார்.

**மௌனத் திருவீதி வருவாயோ தோழி**
**வாராமல் வீண்பழி தருவாயோ தோழி – திருஅருட்பா**

ஞானங்களின் எல்லா அனுபவங்களையும் இவ்வாறு முழுமையாக அறிந்த தவச்சீலர்கள் இறைவனைத் தம்முள்ளே காண்பர். கண்டும் அனுபவம் இன்னமும் முற்றுப்பெற வேண்டிய நிலையிலேயே உள்ளதால் இன்னமும் முழுமையாகக் காணவில்லையே என ஏங்கும் அனுபவமாக விளங்குகின்ற சச்சிதானந்த இன்பப் பெருக்கே – இன்பமே அளிக்கின்ற தேவனே.

**திருச்சிற்றம்பலம்**

## அன்பர்களுக்கு அன்பான வேண்டுகோள்

நமது வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழ் பல அன்பர்களது ஆதரவால் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது மேலும் சிறப்புற அன்பர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய சந்தா தொகையினை செலுத்தி உதவுமாறு தாழ்மையோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

அன்பர்கள் சந்தா தொகையினை M.O மூலமாகவோ அல்லது அறக்கட்டளையின் வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம். விபரங்களுக்கு பக்கம் 26ஐ பார்க்கவும். M.O மூலம் செலுத்துவோர் தங்கள் அலைபேசி என் மற்றும் சந்தா என்னை குறிப்பிட்டு அனுப்பவும்.

புதிதாக இணைய விரும்புவோர் 'புதிய சந்தா' எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கிக் கணக்கில் செலுத்துவோர் பணம் செலுத்தியபின் 8012680865 என்ற அலைபேசி என்னிற்கோ அல்லது vallalartrust@gmail.com என்ற இமெயில் முகவரிக்கோ தெரியப்படுத்தவும். நன்றி !!

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

<u>ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை</u>

காலை உணவிற்கு - ரூ.2,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-

இரவு உணவிற்கு - ரூ.3,500/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-

பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,500/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

<u>Please donate - Cheque / DD In favour of</u>

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

<u>Please donate through:</u> **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

## <u>Please send MO to:</u>

அருள்திரு பாபு சாது

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:- **8012680865, 7502026565**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்

## பசித்திரு! தனித்திரு! விழித்திரு!



## இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

சுருள்விரிவுடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி அகவல்

**நாள்:** ஆகஸ்ட் 26, 27 & 28 வெள்ளி, சனி, ஞாயிறு
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்:** வள்ளலார் சத்திய யோக சாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**இந்த பயிற்சி முகாமில்...**

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானங்கள்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 50 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு: 94434 89849, 99651 50531
அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை,
திருவண்ணாமலை.

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly July 2016, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# மாதாந்திர கூட்டுப்பிரார்த்தனை

பாட்டால் உனது பதத்தை நாடிப் பாடும் வாயரே
பதியே இந்த உலகில் எனக்கு மிகவும் நேயரே
நாட்டார் எனினும் நின்னை உளத்து நாட்டார் ஆயிலோ
நயவேன் சிறிதும் நயத்தல் கயக்கும் எட்டிக் காயலோ - திருஅருட்பா 1830

**நாள்:** ஜூலை 31 ஞாயிறு

**இடம் :** வள்ளலார் சத்திய யோகசாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

## நிகழ்ச்சி நிரல்

- அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- ஜோதி தியானம்
- அன்னதானம்



**தொடர்புக்கு: 99427 76351, 94434 89849.**

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 97896 02258